தரங்கம்பாடி

ஓலை ஆவணங்கள்

ஆசிரியர்
சீ. இராமச்சந்திரன், எம்.ஏ.,
கல்வெட்டு ஆய்வாளர்.

பதிப்பாசிரியர்
தி.ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப.,
சிறப்பு ஆணையர், தொல்லியல் துறை,
சென்னை – 600 008.

BIBLIOGRAPHIAL DATA

Title	:	**Taraṅgampāḍi Ōlai Āvaṇaṅgaḷ**
Author	:	S. Ramachandran, M.A.
Editor	:	T.S. Sirdhar, I.A.S.
Copy Right	:	Department of Archaeology, Government of Tamil Nadu.
Subject	:	Archival Research
Language	:	Tamil
Edition	:	First
Publication No & year	:	160 - 2005
Type point	:	11
No. of Pages	:	84+4
Paper Used	:	80 Gsm Maplitho
Printer	:	**Jai Ganesh Offset Printers,** 19, Venkatasamy Lane, Santhome, Chennai - 600 004 Phone : 2493 4535
Publisher	:	**State Department of Archaeology** Tamil Valakam, Halls Road, Egmore, Chennai - 600 008.
Price	:	Rs. 30/-

பதிப்புரை

'தரங்கம்பாடி ஓலை ஆவணங்கள்' என்ற இந்நூல், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் 160 –ஆம் வெளியீடாக வெளிவருகிறது. இந்நூலில் நாகப்பட்டினம் மாவட்டம் தரங்கம்பாடியை அடுத்துள்ள சிற்றூர்களில் தொல்லியல் துறையால் சேகரிக்கப்பட்ட ஓலை ஆவணங்களின் வாசகங்கள் இடம் பெறுகின்றன. இவ்வோலை ஆவணங்கள் தரங்கம்பாடி டேனிஷ்கோட்டை அகழ்வைப்பகத்தில் தற்பொழுது பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

தரங்கம்பாடிக் கடற்கரையில் கம்பீரமான தோற்றத்துடன் காட்சியளிக்கும் கோட்டை, டென்மார்க் அரசர் நான்காம் கிறிஸ்டியனின் கடற்படைத் தலைவராக இருந்த ஓவ்கிட் என்ற இளைஞரால், தஞ்சை அரசர் இரகுநாத நாயக்கருடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி கட்டுவிக்கப்பட்டதாகும். (இக்கோட்டையின் தற்போதைய நிழற்படமே முன் அட்டையில் இடம் பெறுகிறது. பழைய நிழற்படமும் தரங்கம்பாடிப் பகுதியில் கண்டறியப்பட்ட கப்பல் பாகங்களின் நிழற்படமும் பின் அட்டையில் இடம்பெறுகின்றன.) டேனிஷ் கிழக்கிந்தியக் கும்பினியாரின் வணிகச் செயல்பாடுகளுக்காகப் பயன்பட்ட இக்கோட்டை 'டேன்ஸ்பர்க்' என அழைக்கப்பட்டது. 1977 ஆம் ஆண்டிலிருந்து டேன்ஸ்பர்க் கோட்டை தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இக்கோட்டையில் அமைக்கப்பட்டுள்ள அகழ்வைப்பகத்தின் முதல் காப்பாட்சியராகப் பணிபுரிந்த திரு.சீ.இராமச்சந்திரன் அவர்களால் இவ்வோலை ஆவணங்கள் சேகரிக்கப்பட்டு வாசித்தெழுதப்பட்டன. கி.பி.19 ஆம் நூற்றாண்டைய சமுதாய ஆவணங்கள் எனக் கொள்ளத்தக்க இவ்வோலைச் சுவடிகளை வெளியிடுவது தமிழ்நாட்டு வரலாற்று ஆய்வுக்கும் தமிழ்மொழி ஆய்வுக்கும் பயன்படும் என நம்புகிறேன்.

இந்நூலைக் கணினியில் தட்டச்சு செய்த இத்துறைப் பணியாளர் திரு. இரா.கோபு, பழந்தமிழ் எண்கள், குறியீடுகள் முதலியவற்றை உரிய இடங்களில் பொருத்திய இத்துறைக் கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவர் திரு.இரா.பாஸ்கரன், உரிய நிழற்படங்கள் எடுத்து வழங்கிய துறை நிழற்படக்காரர் திரு.மு.த.ஸ்ரீதரன் ஆகியோர் பாராட்டுக்குரியோராவர்.

20.1.2005
சென்னை 113

தி.ஸ்ரீ.ஸ்ரீதர்,
சிறப்பு ஆணையர்,
தொல்லியல் துறை,
தமிழ்நாடு அரசு.

ஆய்வு முன்னுரை

நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஒரு வட்டத்தின் தலைநகராக உள்ள தரங்கம்பாடி, கடற்கரையோரச் சிற்றூராகும். இவ்வூரையடுத்து உள்ள பொறையாறு சற்றுப் பெரிய ஊராகையால் அவ்வூரில் தான் அரசு அலுவலகங்கள், காவல் நிலையம் முதலியன இயங்குகின்றன. ஆயினும் மயிலாடுதுறை வட்டத்தின் பெரும் பகுதியும் சீர்காழி வட்டத்தின் சில பகுதிகளும் பிரிக்கப்பட்டுத் தரங்கம்பாடி வட்டம் என்ற பெயரில் இவ்வட்டம் உருவாக்கப்பட்டதற்கு வரலாற்றுப் பின்னணி உண்டு. கி.பி.1620 முதல் 1845 வரையிலும் டேனிஷ் கிழக்கிந்தியக் கும்பினி மற்றும் டேனிஷ் அரசரின் பிரதிநிதிகள் நிர்வாகத்தில் தரங்கம்பாடி இருந்துள்ளது. 1845 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கும்பினி, தரங்கம்பாடியையும் அதனைச் சுற்றியுள்ள பொறையாறு, சாத்தங்குடி, காட்டுச்சேரி, தில்லையாடி முதலிய ஊர்களையும் டேனிஷ் அரசிடமிருந்து விலைக்கு வாங்கித் தஞ்சாவூர் மாவட்டத்தில் இணைத்தது. 1860 ஆம் ஆண்டளவில் சில காலம் தரங்கம்பாடி, தஞ்சாவூர் மாவட்டத்தின் தலைநகராக இருந்துள்ளது. இதற்கு முதன்மையான காரணம், தரங்கம்பாடி ஒரு துறைமுகமாகவும் ஐரோப்பியப் பாணியில் கட்டப்பட்ட பெரிய கட்டடங்களையும் அகன்ற ஒழுங்கான வீதிகளையும் கொண்ட நகரமாகவும் இருந்தது தான். 19 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் உள்நாட்டு ரயில் போக்குவரத்து மூலமான சரக்குப் பரிவர்த்தனை தொடங்கப்பட்ட பிறகு உள்நாட்டு நகரங்களின் முக்கியத்துவம் அதிகரிக்கத் தொடங்கிற்று. அதன் விளைவாகத் தரங்கம்பாடி தனது முதன்மையைச் சிறுகச் சிறுக இழந்து சிற்றூராக நேர்ந்தது.

தரங்கம்பாடிக் கடற்கரையிலமைந்துள்ள டேன்ஸ்பர்க் கோட்டை 1977 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் பாதுகாக்கப்படும் வரலாற்றுச் சின்னமாக அறிவிக்கப்பட்டது. 1978 ஆம் ஆண்டில் அக்கோட்டையில் அகழ்வைப்பகம் (காட்சிக்கூடம்) ஒன்று அமைப்பதற்கான முயற்சி தொடங்கிற்று. தரங்கம்பாடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள ஊர்களிலிருந்து டேனிஷ் நிர்வாகக் காலத்தில் வெளியிடப்பட்ட இந்தோ-டேனிஷ் காசுகள், 18-19 ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த காகிதத்திலும், ஓலைச்சுவடியிலும் அமைந்த ஆவணங்கள், தரங்கம்பாடித் துறைமுகத்தில் இயங்கிய கப்பல்களின் பாகங்கள் ஆகிய அரும் பொருள்கள் சேகரிக்கப்பட்டுக் காட்சிக்கு வைக்கப்பட்டன. அவ்வாறு சேகரிக்கப்பட்ட காகித ஆவணங்களுள் பெரும்பாலானவை, டேனிஷ் மொழியில் எழுதப்பட்டவையாகும். இவை 1777-க்கும் 1845-க்கும் இடைப்பட்ட காலத்தில், 'இராசாவின் ஊர் அளவு குமுசியோன்' எனப்பட்ட, தரங்கம்பாடி டேனிஷ் ஆளுநரின் நிர்வாகத்தில் செயல்பட்ட நில அளவை மற்றும் பதிவு ஆணையத்தால் **(Land Survey and Registration Commission)** பதிவு செய்யப்பட்ட நிலங்களைப் பற்றிய விவரத்தைக் குறிப்பிடும் தனியார்க்குரிய பத்திரங்களாகும். வெளிப்பாளையம் மலைப் பெருமாள் செட்டியார் என்பவரிடமிருந்து சேகரிக்கப்பட்ட காகித ஆவணம் ஒன்று 22.02.1845 அன்று தரங்கம்பாடியை டேனிஷ் அரசப் பிரதிநிதிகளிடமிருந்து பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கும்பினி விலைக்கு வாங்கியது குறித்த ஆவணத்தின் உண்மை நகலாகும். மூலப் பிரதியிலிருந்து இதன் நகலினைத் தயாரித்தவர், தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்த சாந்தப்பன் டேவிட் என்பவராவார்.

அவர் 12.02.1887 அன்று, மூலப் பிரதியிலிருந்து இதனை நகல் எடுத்துள்ளார். இந்த ஆவணம், 1987 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் தேதியன்று அப்போதைய டென்மார்க் பிரதமர் பால் ஷ்லூட்டர் அவர்கள் தரங்கம்பாடிக்கு வருகை புரிந்ததையொட்டி, அப்போதைய தொல்லியல் துறை இயக்குநர் முனைவர் இரா.நாகசாமி அவர்களால் தயாரித்து வெளியிடப்பட்ட 'Tarangampadi' என்ற சிறு நூலில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பகத்தில் டேனிஷ்–தமிழ்க் காகித ஆவணங்கள் உள்ளன. அவை வரலாற்று முக்கியத்துவம் உடையவை. தரங்கம்பாடி டேனிஷ் கோட்டை அகழ்வைப்பகச் சேகரிப்பிலுள்ள டேனிஷ்–தமிழ்க் காகித ஆவணங்கள் அத்தகைய வரலாற்று முதன்மையுடையன அல்ல. ஆயினும் தரங்கம்பாடியிலிருந்த கடுதாசிப் பட்டறை எனப்படும் காகிதத் தயாரிப்புக் கூடத்தில் தயாரான காகிதங்களில் அழகிய கையெழுத்தில் மையால் எழுதப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்டுள்ள இப்பத்திரங்கள் டேனிஷ் நிர்வாகம் பற்றிய ஆய்வுக்குப் பயன்படுவனவாகும்.

ஓலை ஆவணங்கள்:

1979–80 ஆம் ஆண்டுகளில் தரங்கம்படி டேனிஷ்கோட்டை அகழ்வைப்பகத்திற்காகச் சாத்தங்குடி, காட்டுச்சேரி ஆகிய ஊர்களில் கிராம முன்சீப் அல்லது பட்டாமணியம் போன்ற செல்வாக்கு மிக்க பதவி வகித்த குடும்பங்களைச் சேர்ந்த திரு.கோவிந்தசாமி செட்டியார், திரு.இராஜகோபால் செட்டியார் ஆகியோரிடமிருந்து சேகரிக்கப்பட்ட ஓலை ஆவணங்களுள் 110 ஓலை ஆவணங்கள் இந்நூலில் வெளியிடப்படுகின்றன. இவை சராசரியாக 40 செ.மீ. நீளம், 3 செ.மீ. அகலம் உடைய தனித்தனி ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டுள்ளன. இவை, கடன் கொடுத்தல் வாங்குதல், பண்ணைக் கூலி ஒப்பந்தம், பொருள்களை விற்றல் வாங்குதல், போன்ற தனிப்பட்ட மனிதர்களுக்கிடையிலான பரிவர்த்தனைகள் தொடர்பான ஆவணங்களாகும். அரசியல் வரலாற்று முதன்மையேதும் இவற்றில் இல்லை. ஆயினும் கி.பி.19 ஆம் நூற்றாண்டில் வழக்கிலிருந்த சமுதாய நடைமுறைகள், பத்திரப் பதிவு மொழிநடை, சொல்வழக்குகள் போன்றவற்றை ஆய்வு செய்ய இவை பயன்படும். இச்சுவடிகள் அனைத்திலும் ஆண்டு பற்றிய விவரம் தமிழ் எண்களில் தரப்பட்டுள்ளது. எனினும் கிறிஸ்துவ சகாப்த ஆண்டே குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஐரோப்பிய நிர்வாகத்தின் தாக்கத்தால் நிகழ்ந்ததென்பது தெளிவாகும். ஓலைச்சுவடியில் பத்திரம் எழுதுவதற்குரிய மொழி நடையில், உரிய தொழில் நுட்பச் சொற்களைப் பயன்படுத்தி எழுதும் ஆற்றலும் அனுபவமும் படைத்தோரே இவ் ஆவணங்களை எழுதியுள்ளனர். ஒவ்வோர் ஏட்டிலும் 'நெட்டெழுத்து உள்பட' இன்னார் கையெழுத்தில் எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் காணப்படுகிறது.

19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்திய நாட்டின் பெரும்பகுதி ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கும்பினியின் ஆளுகைக்குள் வந்துவிட்டது. உலக அளவில் இங்கிலாந்துக்குச் சமமான ஒரு பேரரசாக உருவாக முடியும் என்ற கனவு பிரான்சு நாட்டுக்கு மட்டுமே இருந்தது. நெப்போலியன் என்ற மாவீரனின் தலைமையில் பிரான்சு நாடு ஆற்றல் வாய்ந்த அரசாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தது. தமிழகத்தில் தரங்கம்பாடியையடுத்துத் தெற்கில் 14 கி.மீ. தொலைவிலிருந்த காரைக்கால், பிரெஞ்சு அரசின் ஆளுகையிலிருந்தது. எனவே ஆங்கிலேயக் கிழக்கிந்தியக்

கும்பினி, தரங்கம்பாடியிலிருந்த டேனிஷ் ஆளுநரின் நடவடிக்கைகளைத் தீவிரமாகக் கண்காணிக்கத் தொடங்கிற்று. ஆங்கிலேயரின் அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டே டேனிஷ் ஆளுநர்கள் செயல்பட வேண்டிய நிலையிலிருந்தனர். 1815 இல் நெப்போலியன் வீழ்த்தப்பட்ட பின்னர் ஆங்கிலேயரின் கண்காணிப்பு சற்று குறைந்தது என்றாலும், தரங்கம்பாடியையும் சுற்றுப்புறச் சிற்றூர்களையும் மட்டும் நிர்வகிப்பதில் லாபம் ஏதும் இல்லை என்பதை டேனிஷ் ஆளுநர்கள் புரிந்து கொண்டனர். 1845 இல் தான் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கும்பினி தரங்கம்பாடியை டேனிஷ்காரர்களிடமிருந்து முழுமையாக விலைக்கு வாங்கித் தனது ஆட்சிப் பகுதிக்குள் இணைத்துக் கொண்டது என்றாலும், 1815 ஆம் ஆண்டிலிருந்தே ஆங்கிலேய நிர்வாக நடைமுறைகள் தரங்கம்பாடியில் பின்பற்றப்படத் தொடங்கின. ஆவணங்களில் இதன் பிரதிபலிப்பு உள்ளது.

ஓலை ஆவணங்களில் ஊர்ப் பெயர் வழக்குகள்:

இவ்வோலைச்சுவடி ஆவணங்களில் தரங்கம்பாடி என்ற பெயரே பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. உண்மையில் இவ்வூரின் பழம்பெயர் சடங்கன்பாடி என்பதாகும். கி.பி.14 ஆம் நூற்றாண்டுக்குரிய தரங்கம்பாடி மாசிலா நாதர் கோயிற் கல்வெட்டில் இப்பெயர் குறிப்பிடப்படுகிறது.[1] கி.பி.16 ஆம் நூற்றாண்டிலும் இப்பெயரே வழக்கிலிருந்துள்ளது.[2] அக்கால கட்டத்தில் போர்ச்சுகீசிய வணிகக் கும்பினியார் இவ்வூர்ப் பெயரை **Trangambari** என்றும் **Trangambar** என்றும் உச்சரித்துள்ளனர் என்பது அக்கால வரைபடங்களால் தெரிய வருகிறது. இவ்வழக்கே தமிழில் தரங்கம்பாடி எனத் திரிந்திருக்க வேண்டும். தரங்கம் என்பது கடல் அலையைக் குறிப்பதால் இப்பெயர் பொருத்தமானது என மக்களால் ஏற்கப்பட்டு வழக்கில் நிலைத்துவிட்டது போலும். இனி, ''தயங்கம்பாடி'' என்ற பெயர் வழக்கு சில ஏடுகளில் (ஏடு.5) காணப்படுகிறது. இப்பெயரை நியாயப்படுத்தும் வகையில் சூரசம்ஹாரம் முடிந்த பின்னர் முருகன் தயங்கி நின்ற இடமாதலால் தயங்கம்பாடி என்று இவ்வூர் பெயர் பெற்றதாக ஒரு புராணக் கதையும் உருவாக்கப்பட்டது.

தரங்கம்பாடியையடுத்துள்ள பொறையாறு பற்றிச் சங்க இலக்கியங்களில் குறிப்பு உள்ளது.[3] பொறை என்ற சொல் சிறு குன்று எனப் பொருள்படும். மணற்குன்றுகளைப் 'பொற்றை' என்ற சொல்லால் வழங்கியுள்ளனர். இப்பகுதியில் மணற்குன்றுகள் நிறைந்து காணப்படுகின்றன. உப்பாறு என்ற ஆறும் ஓடுகிறது. தரங்கம்பாடி டேனிஷ் கோட்டையின் தெற்கே இவ்வாறு கடலில் கலக்கிறது. மணற்குன்றுகளும் ஆறும் உள்ள பகுதி என்ற பொருளிலேயே 'பொறையாறு' என்ற பெயர் தோன்றியிருக்க வேண்டும். கி.பி. 18–19 ஆம் நூற்றாண்டுகளில் பிறையாறு என்பதே இவ்வூரின் சரியான பெயர் எனக் கருதப்பட்டு, சிவபெருமான் தலையில் இடம்பெறும் பிறையும் ஆறும் இவ்வூர்ப் பெயருக்குக் காரணமாயின என்ற புராணக் கதையும் உருவாயிற்று. அதன் விளைவாகப் பிறையாறு என்ற வழக்கு ஆவணம் ஒன்றில் (ஏடு–12) காணப்படுகிறது.

தில்லையாடி எனத் தற்போது வழங்கப்படும் ஊர் பொறையாற்றையடுத்துள்ளது. இவ்வூர், கல்வெட்டுகளில் 'தில்லையாளி' என்றே குறிப்பிடப்படுகிறது. தில்லையை (சிதம்பரத்தை) ஆள்பவன் என்ற பொருளில் நடராசப் பெருமானை இது குறித்திருக்க வேண்டும். ஓலைச்சுவடி யாவணங்களில் (ஏடு11) தில்லையாளி என்ற வடிவம் காணப்படுகிறது. டேனிஷ் காகித ஆவணங்களிலும் Tillaly

என்றே இவ்வூர் குறிப்பிடப்படுகிறது. யெருக்கிட்டாஞ்சேரி என்று ஆவணங்களில் (ஏடு 101) குறிப்பிடப்படும் ஊரின் பழம்பெயர் "எருக்காட்டுச் சேரி" என்பதாகும். மாணிக்கப் பங்குல், மாணிக்கப் பொங்கல் என்று பலவிதமாகக் குறிப்பிடப்படும் ஊர் (ஏடு 101,104,108) தற்போது மாணிக்கப் பங்கு என வழங்கப்படுகிறது. இது தேவதாசியர்களுக்கு வழங்கப்பட்ட ஊராக இருக்கலாம்.

ஊர் பற்றிய விவரங்கள்:

தரங்கம்பாடியிலிருந்த கோட்டை, ராசா தெரு, போன்றவை ஆவணங்களில் குறிப்பிடப்படுகின்றன. தில்லையாளியிலிருந்த நீலச்சாயம் தயாரிக்கிற சாவடி ஏடு–45 இல் குறிப்பிடுகிறது. நீலச்சாயம் தோய்க்கப்பட்ட துணிகள் தரங்கம்பாடித் துறைமுகம் மூலமாக ஏற்றுமதியாகியுள்ளன. இலங்கைக்கு அரிசி ஏற்றுமதியாகியுள்ளதென்பதற்கும் ஆவணச் சான்றுகள் உள்ளன. சாத்தங்குடி சபாபதி செட்டியாருடன் வெளிப்பாளையம் பரங்கி சின்னசெட்டி என்பவர் ஓர் ஒப்பந்தம் செய்துள்ளார். அதன்படி, ஆற்றங்கரைப் பண்டசாலையில் அரிசி கொண்டு வந்து அளப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். (ஏடு–21). ஆற்றங்கரைப் பண்டகசாலை என்பது தரங்கம்பாடி டேனிஷ் கோட்டைக்குத் தெற்கே உப்பனாற்றங்கரையில் அமைந்திருந்த பண்டக சாலையாகும். எருக்கட்டாஞ்சேரியில் இருந்த சவுக்காரக் கிடங்கு (சோப் தயாரித்துச் சேமித்து வைக்கும் தொழிற்கூடம்) ஏடு 93இல் குறிப்பிடப்படுகிறது. சாத்தங்குடியிலிருக்கும் "ஸ்ரீஸ்ரீ நவாபு சாலை" ஏடு 4 இல் குறிப்பிடப்படுகிறது. இவ்வேட்டின் ஆண்டு 1837 ஆகும். இது ஆற்க்காட்டு நவாபுக்குரிய அலுவலகக் கட்டிடத்தைக் குறிக்கக் கூடும்.

வெளிப்பாளையம் என்பது தரங்கம்பாடிக் கோட்டை மதிற் சுவருக்கு வெளியே, உப்பனாற்று அகழிக்கு வெளியே அமைந்துள்ள குடியிருப்புப் பகுதியாகும். இங்கு சேனைக் குடையார் (இலை வாணியர்) பிரிவினர் அதிகமாக வாழ்கின்றனர். இங்கு ஸ்ரீகற்பக கணபதி கோயில் அமைந்துள்ளது. இக்கணபதி, 'வீரகற்பக விநாயகர்' என்ற பெயரில் 'தரங்கை வீரவேலாயுத சுவாமி பிள்ளைத் தமிழ்' என்ற நூலின் காப்புச் செய்யுளில் போற்றப்படுகிறார்.[4] தரங்கம்பாடி மாசிலாநாதர் கோயிலிற் பொறிக்கப்பட்டுள்ள கி.பி.14 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்று, பதினெண் விஷயத்தார் எனப்பட்ட துறைமுக வணிகர் குழுவினரும் கரையார் எனப்படும் மீகாமன் குழுவினரும் "வீரகற்பகன் சந்தி" என்ற பெயரில் தினசரிப் பூசை நடத்த ஏற்பாடு செய்த விவரத்தைக் குறிப்பிடுகிறது. எனவே அக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் வீரகற்பகன் சந்தி இவ்விநாயகருடன் தொடர்புடையதே எனத் தெரிகிறது. இத்தகைய பழமையான மரபுடைய கற்பக விநாயகருக்கு வழங்கப்பட்ட தர்மசாதனப் பட்டையமாக ஓர் ஓலை ஆவணம் (ஏடு–48) அமைந்துள்ளது.

1841 ஆம் ஆண்டைச் சேர்ந்த ஓர் ஆவணத்தில் (ஏடு–53) தரங்கம்பாடிச் சரகத்தின் வடஎல்லையாகக் கடறகரையோரத்தில் அமைந்திருந்த டேனிஷ் நிர்வாகப் பகுதியின் எல்லை குறிப்பிடப்படுகிறது. இதன் வடக்கே பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கும்பினி ஆட்சிப் பகுதி தொடங்குகிறது. ஆனைக் கோயில் என்ற ஊரே எல்லைப் பகுதியாகும். 'பேரளம் தாலுகா திருக்கடவூர் மாகாணம் பிள்ளைப் பெருமாள் நல்லூர் வேப்பஞ்சேரி கிராமம் ஆனைக்கோயில் நடப்புக்

கரைக்குக் கிழக்கு அம்பனாற்றுக்குத் தெற்கு' என இவ்விவரம் குறிப்பிடப்படுகிறது. ஆனைக் கோயிலில் திருக்கடவூர் காலகால சுவாமி கோயிலுக்குரிய அபிஷேகக் கட்டளை இலுப்பைத் தோப்பு முதலிய மானிய நிலங்களும் மடமானியம் என்ற பெயருடைய நஞ்சை நிலமும் இருந்த செய்தி ஏடு–43 இல் குறிப்பிடப்படுகிறது. மடமானியம் என்பது திருக்கடவூர்க் கோயிலை நிர்வகித்து வரும் தருமபுரம் ஆதீனத்திற்கு நாயக்க மன்னர்கள் காலத்தில் மானியமாக வழங்கப்பட்ட நிலமாக இருக்க வேண்டும். மாணிக்கப் பங்கு ஊரில் கோயில் குருக்கள் ஒருவருக்கு உரியதாக இருந்த 'துரை கோட்டகம்' என்ற பெயருள்ள நிலம் ஏடு 52 இல் குறிப்பிடப்படுகிறது. டேனிஷ் துரை ஒருவரால் இந்நிலம் பெயர் பெற்றுள்ளது எனத் தெரிகிறது.

காட்டுச்சேரியிலிருக்கும் "ராச சோளீஸ்வர சுவாமியார்" பற்றிய குறிப்பு ஏடு–15 இல் காணப்படுகிறது. சோழர் காலத்தைச் சேர்ந்த இக்கோயில் பழுதுற்ற நிலையில் காணப்படுகிறது. சோழர் காலத்தைச் சேர்ந்த துண்டுக் கல்வெட்டுகள் இக்கோயிலில் உள்ளன.

சாத்தங்குடியிலிருக்கும் "சாலமன் தோட்டம்" ஏடு 22–இல் குறிப்பிடப்படுகிறது. சாலமன் தோட்டம் என்பது டேனிஷ் நிர்வாகக் காலத்தில் திராட்சைத் தோட்டம் இருந்த இடமாகும். சாலமன் என்ற பெயரே திராட்சை ரசம் (Wine) தொடர்பானதாகும். இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை தரங்கம்பாடி திராட்சை என்பது தமிழகம் முழுவதும் பெயர் பெற்ற திராட்சைப் பழ வகைகளுள் ஒன்றாகும். இத் திராட்சை வகை, சாலமன் தோட்டம் முதலிய இடங்களில் விளைந்ததே என்பது குறிப்பிடத்தக்கது.

டேனிஷ் நிர்வாகம் பற்றிய செய்திகள்:

தரங்கம்பாடியிலிருந்த டேனிஷ் ஆளுநர், இராசா என்றும் மகாராசா என்றும் குறிப்பிடப்படுகிறார். கி.பி.1822 ஆம் ஆண்டைச் சேர்ந்த ஓர் ஆவணம் (ஏடு–64) 'மகாராச கொவறண்மெந்து' எனக் குறிப்பிடுகிறது. 'கவர்ன் மென்ட்' எனத் தற்போது வழங்கப்படும் ஆங்கிலச் சொல்லே இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அரசின் தலைமைச் செயலகம் (செக்ரடேரியட்) 'சக்கறத்தார் சாலை' எனக் குறிப்பிடப்படும் மரபும், 'மாஜிஸ்ட்ரேட்' என்ற பதவிப் பெயர் 'மத்திஷ்டர்' என்று குறிப்பிடப்படும் மரபும் டேனிஷ்–தமிழ்க் காகித ஆவணங்களிற் காணப்படுகின்றன. இவை சக்கரவர்த்தி, மத்யஸ்தர் போன்ற வழக்குகளுக்கொப்ப அமைத்துக் கொண்ட பெயர்களாகலாம். பிரவர்த்திகர்(செயலர்) என்பது பர்வத்திக்காரன் என்றும், Providiteer *என்றும் குறிப்பிடப்படுகிறது. நிதித்துறை, கருவூலம், வருவாய்த்துறை ஆகியவற்றின் தலைமை அலுவலர் பினான்ஸ்ருத் எனப்பட்டார். 'பினான்சுறோதுக் குபோது துரை' என்பவர் ஏடு–64 இல் குறிப்பிடப்படுகிறார். குபோது என்பது Koefoed என்ற, டேனிஷ் குடும்பப் பெயரின்* (Surname) *தமிழ் உச்சரிப்பாகும். Cow foot (பசுக் காலடி) எனப் பொருள்படும் இப்பெயர், ஓர் ஓலைச்சுவடியில் முத்திரையாகப் பொறிக்கப்பட்டுள்ளது.*

Wuzbendig, Wulmegdig என்ற பதவிகள் டேனிஷ் காகித ஆவணங்களில் குறிப்பிடப்படுகின்றன. ஏடு–44 இல் 'வுல்மெக்கிஷ்த்து' என்ற பதவிப் பெயர் தமிழில் குறிப்பிடப்படுகிறது. ஏடு–43 இல் இப்பதவிக்குரிய தமிழ்ப் பெயராக 'ஆஸ்தி விசாரணைக்காரர்'

என்ற தொடர் குறிப்பிடப்படுகிறது. ஆனைக் கோயில் என்ற ஊரில் திருக்கடவூர் காலகால சுவாமி கோயிலுக்குரிய நிலங்கள் இருந்தன. இவை தரங்கம்பாடி டேனிஷ் நிர்வாகத்தைச் சேர்ந்த ஒப்புத்துரை என்பவரிடத்தில் அடைமானம் வைக்கப்பட்டுக் கடன் வாங்கப்பட்டது. ஒப்புத்துரை காலம் சென்ற பின்னர் 1834 ஆம் ஆண்டில் அவரது ஆஸ்தி விசாரணைக் காரராகிய கெத்தின் துரையிடத்திலும் ஒப்புத்துரையின் மகன் சனேத்தானிடத்திலும் எருக்காட்டாஞ்சேரி வெங்கடாசல நாயக்கர், கொட்டுப் பாளையத்திலிருக்கும் ராமசாமி செட்டி ஆகிய இருவர், உரிய கடன் தொகையைச் செலுத்தி அடைமானச் சீட்டைத் திரும்பப் பெற்றுக் கொண்டனர். (இவர்கள் இருவருமே திருக்கடவூர்க் கோயிலின் நிலங்களின் பரம்பரைக் குத்தகைதாரர்களாக இருக்க வேண்டும்) மேற்குறித்த நிலங்கள் மூலமாக வருகிற லாபங்களை இவ்விருவரும் தமக்குள் பேர்பாதியாகப் பிரித்துக் கொள்வதற்கு உடன்படிக்கை செய்து கொண்டனர். ஏடு—43 இல் இவ்விரங்கள் குறிப்பிடப்படுகின்றன. வூல்மெக்கிஷ்த்து அல்லது ஆஸ்தி விசாரணைக்காரர் என்பது Power of Attorney (சட்ட பூர்வமான சார்பாளர்) என்பதற்குச் சமமான பதவியாகலாம். ஆறுமுகச் செட்டியார் என்பவரின் "தொனிதனிஸ்", அப்புல் சாயிபு என்பவர் கி.பி.1832 ஆம் ஆண்டைய ஏட்டில் (ஏடு 12) குறிப்பிடப்படுகிறார். இது Don Tanist (மதிப்புறு பிரதிநிதி) என்ற வழக்கின் திரிபாகலாம்.

டேனிஷ் கிழக்கிந்தியக் கும்பினியார், தரங்கம்பாடிப் பகுதியை 1620 ஆம் ஆண்டில் தஞ்சை நாயக்கர் வசமிருந்தே பெற்றனர் என்பது வரலாறு. 1841 ஆம் ஆண்டைச் சேர்ந்த ஓலைச் சுவடி ஒன்று (ஏடு 53) வேப்பஞ்சேரி என்ற கிராமத்தை ஸ்ரீஸ்ரீ சிவந்த பாத நாயக்கர் என்பவரிடமிருந்து முன்னரே விலைக்குப் பெற்றிருந்த பொறையாறு ஆறுமுகச் செட்டியார் என்பவர், அவ்வூரின் அரைப்பங்கு உரிமையைச் சாத்தங்குடி அ.சபாபதிச் செட்டியார் என்பவருக்கு ரூ.3500க்கு விற்ற செய்தியைக் குறிப்பிடுகிறது. இது "உடன்படிக்கை ஓலை" எனக் குறிப்பிடப்படுகிறது.

சந்திரப்பாடி என்ற ஊர், தரங்கம்பாடிக்குத் தெற்கே 2 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூரில் கரைதுறை வேளாளர் எனப்படும் மீகாமன் சமூகத்தவர் வாழ்கின்றனர். இச்சமூகத்தைச் சேர்ந்த டென்மார்க் துபாஷ் காலிங்கராயப் பிள்ளை (கி.பி. 1620)என்பவரின் வம்சத்தவரிடமிருந்து கப்பல் சாத்திரம் என்ற கையெழுத்துப் பிரதி பெறப்பட்டு அரசினர் கீழ்திசைச் சுவடிகள் நூலகத்தால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வூரைச் சேர்ந்த பெரிய தம்பியா பிள்ளை மகன் அப்புக் குப்பையன் என்பவருக்குரிய 'செம்ப. . . தேவி' எனும் பெயருடைய தோணி ஏடு. 47 இல் குறிப்பிடப்படப்படுகிறது. இதன் காலம் 1828 ஆம் ஆண்டாகும். இச்சுவடியில் காத்தான் என்ற பெயருடைய தரவு (தரகர்) ஒருவரும் குறிப்பிடப்படுகிறார். டேனிஷ் காகித ஆவணங்களில் Trocedar என இப்பதவி குறிப்பிடப்படுகிறது. 'ராசாவின் நில அளவு குழிசிய அடையோலை' கி.பி.1807 ஆம் ஆண்டைய ஆவணத்தில் (ஏடு—29) குறிப்பிடப்படுகிறது. கும்பினிக் கோல் என்ற நில அளவு கோல் ஏடு—59 இல் குறிக்கப்படுகிறது. இச்சுவடி கி.பி. 1782 ஆம் ஆண்டுக்குரிய ஆவணமாக இருப்பதால் டேனிஷ் கிழக்கிந்தியக் கும்பினியாரால் அறிமுகப்படுத்தப்பட்ட அளவுகோலாக இது இருக்க வேண்டும் எனத் தெரிகிறது. சிறுவர்களின் பாத அளவை அடிப்படை அளவாகக் கொண்டு நிலத்தை அளப்பது உண்டென்று ஏடு 58 மூலமாகத் தெரிய வருகிறது.

இச்சுவடி கி.பி 1801 ஆம் ஆண்டுக்குரிய ஆவணமாகும்.

தரங்கம்பாடியிலும் சுற்றுப்புறத்திலும் 'தோட்டம்' என்ற பின் ஒட்டுடன் வழங்கப்படும் சில இடங்கள் உள்ளன. இவையெல்லாம் டேனிஷ் அலுவலர்களும் துரைமார்களும் ஓய்வெடுக்கப் பயன்படுத்திய தோட்டம் சூழ்ந்த பண்ணை வீடுகளாகும். இத்தோட்டங்களைப் பராமரிப்பதற்குப் 'பார்க்கர்' என அழைக்கப்பட்ட பராமரிப்பாளர்கள் இருந்தனர். 1836 ஆம் ஆண்டுக்குரிய ஓர் ஆவணத்தில் (ஏடு 7) பார்க்கர் நாகலிங்கம் என்பவர் குறிப்பிடப்படுகிறார்.

மொழி வழக்குகள்:

இவ்வோலைச் சுவடிகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழி வழக்குகள், 18-19 ஆம் நூற்றாண்டுப் பத்திரங்களில் பயன்படுத்தப்படும் மொழி வழக்குகளேயாகும். இச்சுவடிகளை எழுதியவர்களுக்குப் பத்திர மொழி வழக்குகளில் இருந்த அளவு பரிச்சயம், தமிழ் மொழி இலக்கண மரபுகளில் இல்லையெனத் தெரிகிறது. ஒற்றுப்பிழைகள், ரகர-றகர மயக்கங்கள் முதலியன பரவலாகக் காணப்படுகின்றன. ஐரோப்பிய மொழிச் சொற்களைத் தமிழ் ஒலிப்பு முறையில் எழுதுவது இன்றைய வழக்கத்திலிருந்து பெரிதும் வேறுபட்டுக் காணப்படுகிறது.

"ஞாய வாசிப்பு", "ஞாயத்தில் வாசிக்கப்பட்டு" என்ற சொல்லாட்சிகள்
ஏடு-44, 56 ஆகியவற்றில் காணப்படுகின்றன. நீதிமன்றத் தீர்ப்பு என்பது இதன் பொருளாகலாம். 'ஞாயவலிமையைக் கொண்டு தீர்த்துக் கொள்தல்' என்ற வழக்கும் ஆவணங்களில் காணப்படுகிறது.

கிறிஸ்துவ மதத்தார்க்குரிய இடுகாடு 'கிறஷ்த்து ருத்திர பூமி' என ஏடு-49 இலும், "கிறீசத்து ருத்திர பூமி" என ஏடு 59 இலும் குறிப்பிடப்பட்டுள்ளது. தானி [ய]* ல் என்ற கிறிஸ்துவர், கையொப்பம் அல்லது கைக்கீறலுக்குப் பதிலாகத் தமது மத நம்பிக்கையை உணர்த்தும் வண்ணம் குறிசு (Cross) இட்டுள்ளார்(ஏடு-25). 'அனந்திரக்காரன்' என்ற வழக்கு ஏடு-52 இல் காணப்படுகிறது. சொத்தில் பங்கு பெறுகிற அல்லது அடுத்துப் பதவிக்கு வருகிற பாத்தியதையுள்ளவன் என்பது இதன் பொருளாகும். 'கொவரண்மெந்து' (Government) 'ராசீது' (Receipt) 'திராஞ்சுப் பொருது' (Transfer or transport) முதலிய வழக்குகள் ஏடு-61, ஏடு-15, ஏடு-44 ஆகியவற்றில் காணப்படுகின்றன.

அரிசியில் 'கொழியல் நொயிவாட்டு' இல்லாமல் அளக்கப்படவேண்டும் என்ற குறிப்பு ஏடு-19 இல் காணப்படுகிறது. கொழியல் என்பது மாவாக அல்லது துளாக ஆகிப் போன அரிசியையும் நொய் என்பது நொய்ந்து உடைந்து போன அரிசியையும் வாட்டு என்பது வாடிக்கருகிய அரிசியையும் குறித்திருக்க வேண்டும். வேளாண்மை தொடர்பான பல சொல் வழக்குகள் இவ்வேடுகளில் காணப்படுகின்றன. 'ததி தப்பாமல்' பயிர் செய்தல் ஏடு 88 இல் குறிப்பிடப்படுகிறது. பருவம் தப்பாமல் என்பது இதன் பொருளாகும். இதே ஏட்டில் வைக்கோல்புரி 'திரை' எனக் குறிப்பிடப்படுகிறது. 'திதி, திதி என்ற வழக்குகள் நிலையான செல்வம் என்ற பொருளில் பயன்படுத்தப்படுகின்றன. (ஏடு 51) 'களம் வயல், களவடி பற்றிக் கொள்தல்' ஏடு 89 இல்

குறிப்பிடப்படுகிறது. வயலிலும் சூடடிக்கும் களத்திலும் சிதறிக் கிடக்கும் நெல் மணிகளைச் சேகரித்து எடுத்துக் கொள்ளும் உரிமையை இது குறிக்கும். 'களவடி நிபந்தனை' என்ற வழக்கு ஏடு 82 இல் காணப்படுகிறது. உழவு வேலை தொடங்குவதற்கு முன்னரே ஒப்புக் கொண்ட நிபந்தனை என இது பொருள்படும். ஒட்டுமொத்தமாகக் கண்ட விளைச்சல், "கண்டு முதல்" என்று ஏடு 88 இல் குறிப்பிடப்படுகிறது. தஃப்சில் என்ற அரபு மொழி வழக்கு தசுக்கூலி என்ற வடிவில் பயன்படுத்தப்படுகிறது (ஏடு 102). குத்தகைதாரருக்கு விவசாயம் செய்யக் கொடுக்கும் கடனை இது குறிக்கும். "சருவடனக் குத்தகை" என்ற வழக்கு ஏடு 46 இல் குறிப்பிடப்படுகிறது. இது சரவடை எனத் தற்போது வழங்குகிறது. விழல், குளத்து மீன், ஏரிக்கரைப் பனைமரம் ஆகியவற்றைக் குத்தகைக்கு எடுத்தலை இது குறிக்கும். "புறக்குடி வாரம் பிறபோசல்" ஏடு 82 இல் குறிப்பிடப்படுகிறது. நிலத்தின் பால் குடியுரிமை உள்ள உட்குடிகள் போலன்றி ஒப்பந்த அடிப்படையில் குடி ஆனவர்கள் புறக்குடி ஆவர். எவ்வித அடைமானமும் இன்றிப் பெறப்படும் கடன் ''வெண்ணிலைக் கடன்'' என வழங்கப்பட்டதெனச் சில ஆவணங்களால் தெரிய வருகிறது. (ஏடு 1,17,18)

"சிறுவாட்டு நிலம்" ஏடு 39, 59 ஆகியவற்றில் குறிப்பிடப்படுகிறது. களர் நிலம் போன்று தரிசாகக் கிடக்கும் நிலத்தை அந்நிலத்தின் உடைமையாளர் வேறொருவர் வசம் குத்தகைக்கு விட்டு, குத்தகைக்கு எடுத்தவரைக் கொண்டே அந்நிலத்தைத் திருத்திப் பயிர் செய்ய வைத்து, அம்முயற்சிக்குக் கூலியாகக் குறிப்பிட்ட காலத்திற்குக் குத்தகைதாரரே அந்நிலத்தின் விளைச்சலை அனுபவித்துக் கொள்ள அனுமதிப்பது சிறுவாடு எனப்படும். இதனைப் பற்றடைப்பு எனக் குறிப்பிடுவதும் உண்டு.[7]

பலவித அணிகலன்கள் இச்சுவடிகளில் குறிப்பிடப்படுகின்றன. "உக்கட்டு" என்ற பொன்னகை ஏடு 40 இல் குறிப்பிடப்படுகிறது. 'உட்கட்டு' என்பது பரதவர் குலச் சிறுமியர் முதலியோர் குழந்தைப் பருவத்தில் அணியும் தாலி எனத் தமிழ்ப் பேரகராதி குறிப்பிடுகிறது.[8] இலை வாணியர் குலத்தவருள்ளும் சிறுமியருக்கு உட்கட்டு அணிவிக்கும் வழக்கம் இருந்துள்ளது என இச்சுவடியால் தெரிய வருகிறது. 'றோக்கணு' அல்லது "றேக்கணு" என்ற ஆபரணமும் இச்சுவடியில் குறிப்பிடப்படுகிறது. இது "ரேக்கு" (அரசிலை வடிவ ஆபரணம்) என்பதன் திரிபாகலாம். 'கிழவம்' என்ற சொல் ஏடு 36 இல் காணப்படுகிறது. இது "கிழிதம்" என்ற சொல்லின் திரிபாகத் தோன்றுகிறது. பணமுடிப்பு என்பது இதன் பொருளாகலாம்.

"அத்திகாட்டு கறார்நாமா" என்ற தொடர் ஏடு 97 இல் காணப்படுகிறது. அத்திகாட்டு என்பது hypothecate என்ற சொல்லின் திரிபாகலாம். நீதிமன்றத்தின் பொறுப்பில் பிணை செலுத்துதற்குரிய உடன்படிக்கையை அத்திகாட்டு கறார் நாமா என்ற தொடர் குறிக்கக் கூடும். "வலியன் விடுகிற வர்த்தகாள்" என்ற தொடர் ஏடு 48 இல் குறிப்பிடப்படுகிறது. பலிதம், பலிசை என்ற சொற்கள் வட்டியைக் குறிக்கும். வலியன் என்பது இச்சொற்களுள் ஒன்றின் திரிபு எனக் கொண்டால் வட்டித் தொழில் செய்யும் வர்த்தகர்களை இது குறிக்கக் கூடும். தோணிக்கூலி அல்லது வாடகை, 'கேழ்வு' என ஏடு 26 இல் குறிப்பிடப்படுகிறது. இது, கேய்வா என்ற உருது மொழிச் சொல்லின் திரிபாகும். 'சிராங்கு வீரப் படையாச்சி' என்பவர் ஏடு–82 இல் குறிப்பிடப்படுகிறார். சிராங்கு என்ற சொல் சர்ஹங் என்ற உருது மொழிச் சொல்லின் திரிபு

என்றும், கப்பற் கண்காணி அல்லது தலைமை மீகாமனை இச்சொல் குறிக்கும் என்றும் தெரிகின்றன.[6] சிரங்கன் புறஞ்சேரியிலிருக்கும் தானி[ய]* ல் என்பவர் ஏடு–25 இல் குறிப்பிடப்படுகிறார். சிராங்குப் பணியுடன் தொடர்புடைய சொல்லாகச் 'சிரங்கன்' இருக்கக்கூடும்.

செங்கற்கள் 'கோடிக் கறுப்பு, வேகா ஈரவரி, இரசல் இல்லாமல்' இருக்க வேண்டும் என்று ஏடு–20 குறிப்பிடுகிறது. அதிகச் சூட்டினால் ஓரத்தில் கருமை படிதல், சரியான சூடின்றி ஈரப்பதமாக வரியோடுதல், இறைந்து போதல் அல்லது பொங்கி வழிதல் ஆகியவற்றை இவை குறித்திருக்க வேண்டும். செம்மறியாட்டுத் தோல், செம்பிலித் தோல் என ஏடு–23 இல் குறிப்பிடப்படுகிறது. கி.பி.1833 இல் எழுதப்பட்ட ஓலைச்சுவடியில் (ஏடு–38) அப்புச் செட்டியார் என்பவரிடத்தில் கடன் வாங்குவதற்காக ஒருவரால் அடகு வைக்கப்பட்ட 'பசுமை', பழையதாகவும் பீத்தலாகவும் போய்விட்ட படியால் அதனை மேற்குறித்த கடன் தொகைக்குச் சமமான மதிப்புடையதாகக் கருதி அப்புச் செட்டியார் வைத்துக் கொள்ளுமாறும் இதனையே பசுமை விலைக் கிரயச்சீட்டு ஆகக் கொள்ளுமாறும் வாசகம் அமைந்துள்ளது. பசுமை என்பது காஷ்மீர் சால்வை எனப் பொருள்படும்[6] தரங்கம்பாடி கோட்டையைச் சேர்ந்தவர் வசம் இப் 'பசுமை' இருந்துள்ளது. தரங்கம்பாடித் துறைமுகத்தின் மூலமாக உயர் வகைத் துணிகள் இறக்குமதியாகியுள்ளன. அவ்வகையில் இப் 'பசுமை' யும் இறக்குமதியாகியிருக்க வேண்டும்.

'காங்குப் பிடவை' என்ற புடைவை வகை ஏடு–45 இல் குறிப்பிடப்படுகிறது. இது நீல நிறப் புடைவையாகும். இப்புடைவையில் பலவித வடிவங்களை மரக்கட்டையில் செதுக்கிய உருவங்களைக் கொண்டு அச்சுக் குத்துவதுண்டு. இதனைக் 'கொட்டுதல்' என்பர். இப்பணி செய்வோர் கொட்டுக்காரரர் என்றும் அவர்கள் குடியிருந்த பகுதி கொட்டுப் பாளையம் என்றும் வழங்கப்பட்ட செய்தி ஆவணங்களில் குறிப்பிடப்படுகிறது. (ஏடு 44 – 45) கொட்டுப் பாளையம் என்ற பகுதி இப்போதும் உள்ளது. ஆனால் கொட்டுதல் பணி நின்று விட்டது. கொட்டுக்காரரர்களைப் புட்டக்காரரர் என்றும் குறிப்பிடுவதுண்டென்றும் Pyntador என டேனிஷ் மொழியில் குறிப்பிட்டனர் என்றும் டேனிஷ்–தமிழ்க் காகித ஆவணங்களால் தெரிகின்றன. 'சாவடியில் அறுவாகிற புடவை' என்ற குறிப்பு ஏடு 45 இல் காணப்படுகிறது. ஏற்றுமதி செய்வதற்கு முன் இறுதிக்கட்டப் பழுது பார்க்கும் பணி மேற்கொண்டு முழுமையான தரமுடையதாகச் செய்யப்பட்ட புடைவை என்று இது பொருள்படும்.

பாக்கு 'அவணம்' என்ற அளவால் குறிப்பிடப்படுகிறது. ஓர் 'அவணம்' பாக்கு 7 ரூபாய் மதிப்புடையது எனக் கி.பி. 1833 ஆம் ஆண்டுக்குரிய ஓலைச்சுவடி ஆவணம் (ஏடு–10) குறிப்பிடுகிறது. அவணம் என்பது 20,000 பாக்குகள் கொண்ட ஓர் அளவாகும். 'இசப்பு மாமரம்' என்ற குறிப்பு ஏடு 46 இல் காணப்படுகிறது. இசைப்பு (ஒட்டி, இசைவித்து உருவாக்குதல்) என்ற பொருளில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கலாம்.

'அசூர்க்கச்சேரி சிரஸ்தேதார்' என்ற பதவிப் பெயர் கி.பி.1823 ஆம் ஆண்டைய ஆவணத்தில் (ஏடு–63) குறிப்பிடப்படுகிறது. இது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் தலைமைக் கணக்கர் பதவிக்குச் சமமான பதவியாகும். ஹுசூர்(அரசு), கச்சேரி (அலுவலகம்), சர்ரிஷ்டதார் (சிப்பந்தித் தலைவர்) என்ற தொடரே இவ்வாறு வழங்கப்பட்டது. ஏடு–64 இல் 'கபிலோலை'

என்ற தொடர் காணப்படுகிறது. 'கவுல்' என்ற உருது மொழிச் சொல்லுக்கு நிலக்குத்தகை ஒப்பந்தம் என்று பொருளாகும். இச்சொல்லை ஓலை என்ற தமிழ்ச் சொல்லுடன் இணைத்துக் கபிலோலை என வழங்கியுள்ளனர். கி.பி. 17–18 ஆம் நூற்றாண்டைய இஸ்லாமியர் ஆட்சியின் விளைவாக இத்தகைய சொற்கள் வழக்குக்கு வந்துள்ளன.

தோணிகள் விற்கப்பட்ட விவரத்தைக் குறிப்பிடும் ஓர் ஆவணத்தில் (ஏடு–47) 'கலப்பத்து உரு பதினாலு கரிசை ஏத்துமதியாகிற தோணி' என்ற குறிப்பு உள்ளது. தோணியினுள் நீர் புகுந்து விடாமலிருப்பதற்காகக் கலாய் பூசுதல் போலத் தார் அல்லது அதற்கொப்பான பிசின் ஒன்றினைப் பூசுவது கலப்பற்று அல்லது கலப்பத்து எனப்பட்டது. உரு அல்லது உருப்படி என்பது வர்த்தகப் பொருள் அளவைக் குறிக்கும். கரிசை என்பது 400 மரக்கால் அளவு கொண்டது. பொதுவாக நெல் கரிசை அளவில் குறிப்பிடப்படுவது வழக்கமென ஏடு–41 ஆல் தெரிய வருகிறது.

"தொகப்பனார்" என்ற வழக்கு, ஏடு 36–இல் காணப்படுகிறது. இது 'தோப்பனார்' என்ற பேச்சு வழக்கும், இதன் சரியான வடிவமாகக் கருதப்படும் தகப்பனார் என்ற வழக்கும் இணைந்து உருவானதாகும். [9]

காசுகள்:

'புது யிசுக்காட்டு விராகன்' என்ற நாணயம், கி.பி. 1800 ஆம் ஆண்டுக்குரிய ஆவணத்தில் (ஏடு–55) குறிப்பிடப்படுகிறது. இது டேனிஷ் தமிழ்க் காகித ஆவணங்களில் 'Escot Pagoda' எனக் குறிப்பிடப்படுகிறது. கி.பி. 1807 இல் பறங்கிப்பேட்டை விராகன் அல்லது பறங்கி விராகன் பழக்கத்திலிருந்துள்ளது (ஏடு–29). இது ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கும்பினியாரால் வெளியிடப்பட்ட நாணயமாகும். 'Portonovo pagoda' என டேனிஷ் காகித ஆவணங்களில் இக்காசு குறிப்பிடப்படுகிறது. பூ விராகன் எனச் சில ஆவணங்களில் சுருக்கி எழுதப்பட்டுள்ளதைக் காணுகையில், ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கும்பினிக் காசுகளில் இடம் பெற்ற 'பூவராகன்' என்ற வழக்கும் இந்த அடிப்படையிலேயே தோன்றியிருக்கலாம் எனத் தோன்றுகிறது. கி.பி. 16–17 ஆம் நூற்றாண்டுகளில் போர்ச்சுகீசியர்களால் வெளியிடப்பட்ட பறங்கிப் பேட்டைக் காசை முன்மாதிரியாகக் கொண்டு ஆங்கிலேயர்கள் இவ்வராகனை வெளியிட்டிருக்கலாம். கி.பி. 1815–க்குப் பின்னர் (நெப்போலியன் வீழ்ச்சிக்குப் பின்னர்) தரங்கம்பாடி டேனிஷ் நிர்வாகம், ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கும்பினியாரின் மேலாதிக்கத்தை முழுமையாக ஏற்றது. இதன் பின்னர் சென்னைப் பட்டணம் கும்பினி ரூபாய், மதராசி ரூபாய் ஆகியவை தரங்கம்பாடி ஆவணங்களில் குறிப்பிடப்படுகின்றன. (ஏடு–27, 17) கடன் கொடுக்கப்பட்ட தொகைக்கான வட்டி விகிதத்தைக் குறிப்பிடும் போது மதராசி ரூபாய் 100–க்கு மாதம் ஒன்றுக்கு 1 ரூபாய் வட்டியாகக் குறிப்பிடப்படுகிறது. (ஏடு–17) 'செல்லும் கும்பனி ரூபாய்' என்ற வழக்கு கி.பி. 1830 ஆம் ஆண்டைய சுவடியில் (ஏடு 70) காணப்படுகிறது. செல்லும் காசு அல்லது செலாவணியில் உள்ள காசு என்பதே Currency என்ற சொல்லின் பொருளோடு தொடர்புடையதாகும். செல்லாக்காசு என்பது Out of Current எனப் பொருள்படும்.

ஒப்பந்தக் கூலிமுறை:

இந்தியாவில் நிலவிய அடிமை முறை என்பது ஆங்கிலேயக் காலனியாதிக்கத்தால் ஒழிக்கப்பட்டது என வரலாற்றாய்வாளர்கள் கருதுகின்றனர். வெளிப்படையான அடிமை முறை தடை செய்யப்பட்டது என்பது உண்மையே. ஆனால் பண்ணையில் ஒப்பந்தக் கூலியாகப் பணி புரியும் நடைமுறை 19 ஆம் நூற்றாண்டு ஓலைச்சுவடிகளில் குறிப்பிடப்படுகிறது. பண்ணை முதலாளி வசம் குறிப்பிட்ட தொகையைக் கடனாகப் பெற்றுக் கொண்டு அதற்கு ஈடாக வட்டியுடன் கடன் தொகையைச் செலுத்தும் வரை பண்ணையில் கூலி வேலை செய்துவர ஒப்பந்தம் செய்து கொள்தலே ஒப்பந்தக் கூலி முறையாகும். இந்த ஒப்பந்தக் கூலி முறையில் கடன் வட்டியுடன் செலுத்தப்படாவிடில் ஒப்பந்தக் கூலியாள் நிரந்தர அடிமையாகி விடுவார் என்பது பொருளாகும். தென் ஆப்பிரிக்க நேட்டால் பகுதிக்கு indentured labour *என்ற பெயரில் ஐரோப்பிய முதலாளிகளால் அனுப்பப்பட்ட அரை அடிமைகள் இந்தியாவிலிருந்து கூலித் தொழிலாளராகச் சென்று சேர்ந்ததற்கு அடிப்படையாக இருந்தது இந்த ஒப்பந்தக் கூலி முறையே ஆகும். இது தொடர்பாக முதன்மையாகக் கவனிக்க வேண்டிய செய்தி, தென் ஆப்பிரிக்காவில் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மகாத்மா காந்தியடிகளுக்குத் தமிழ் கற்பித்த தில்லையாடி கன்னியப்ப செட்டியார் என்பவரும் பொறையாறு பாலகுரு செட்டியார் என்பவரும் தரங்கம்பாடியை யொட்டியுள்ள ஊர்களைச் சேர்ந்த இலைவாணியர் (சேனைக்குடையார்) இனத்தவராவர். மேலும் ஒப்பந்தக் கூலியாகத் தென்னாப்பிரிக்கா சென்ற தில்லையாடி வள்ளியம்மை, (ஒப்பந்தக் கூலி ஓலைச்சுவடி கிடைத்த காட்டுச் சேரிக்கு அருகில் 2 கி.மீ. தொலைவில் உள்ள ஊரான) தில்லையாடியிலிருந்து இவ்வாறு சென்றவராவார். ஒப்பந்தக் கூலிகளைப் பராமரித்த நிலச் சுவான்தார்கள் இப்பகுதியில் செட்டியார் என்ற சாதிப் பட்டம் புனையும் இலைவாணியர் இனத்தவராவர். வெற்றிலைக் கொடிக்கால் பயிரிடுவோராக அறியப்படும் இவ்வினத்தவர், சேனையங்காடியார் என்றும் சேனைக் குடியுடையார் அல்லது சேனைக் குடையார் என்றும் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றனர்.*

'பண்ணை ஆள் ஒத்திக் கடன் சீட்டு' என்ற வாசகம், கி.பி. 1857 ஆம் ஆண்டு ஆவணத்தில் (ஏடு – 107) காணப்படுகிறது. சாம்பவர் (பறையர்) குலத்தைச் சேர்ந்த ஒருவர், தமது மகனைப் பண்ணையார் வசம் ஒற்றி வைத்துக் கடன் வாங்கியுள்ளார். கி.பி. 1858 ஆம் ஆண்டுக்குரிய ஆவணத்தில் சிலம்பன் காலாடி மகன் பள்ள பாலன் என்பவர், தாமும் தமது பெண்டாட்டி காத்தியும் சாத்தங்குடி அப்பாசாமி செட்டியாரின் பண்ணையில் வேலை செய்ய ஒத்துக் கொண்டு, தம்மை அவரிடத்து ஒற்றி வைத்து ஆறு ரூபாய் கடனாகப் பெற்றுக் கொள்கின்றனர். இக்கடனுக்கு வட்டியாக, கடனைத் திருப்பிச் செலுத்தும் வரை பண்ணை வேலை செய்து வர வேண்டும். (அவ்வேலைக்குக் கூலி உண்டு)

அடிமை முறை என்பது சட்ட பூர்வமாக ஒழிக்கப்பட்டு விட்டதால் சட்டபூர்வமான நடவடிக்கைகளிருந்தும் தண்டனையில் இருந்தும் தம்மைக் காத்துக் கொண்டு சில வரையறைகளுடன் கூடிய அடிமை முறையைத் தொடர்ந்து பின்பற்றுவதற்காகவே பெருநிலக்கிழார்களும் , செல்வந்தர்களும் நிலக்கூலிகளாக இருந்தவர்களை இவ்வாறு ஒற்றி வைக்கச் சொல்லிக் கடன் கொடுத்துள்ளனர். இத்தகைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் தான்

பிரிட்டிஷ் கும்பினியும் பின்னர் (அடிமை முறை என்ற கொடுமையை ஒழித்து விட்டதாகப் பறை சாற்றிய) பிரிட்டிஷ் அரசும் ஒப்பந்தக் கூலிகளான அரை அடிமைகளைத் தென்னாப்பிரிக்காவுக்கு அனுப்பின. அதாவது தமக்குரிய சுரங்கங்களிலும் தோட்டங்களிலும் பணிபுரிவதற்கான நபர்களை, அவர்களின் குடும்பத்தார் வசம் குறிப்பிட்ட தொகையைக் கடனாகக் கொடுத்து, அக்கடனுக்கு ஈடாக அவர்களைத் தம் பொறுப்பில் எடுத்துக் கொண்டு கப்பலில் அழைத்துச் சென்று கூலியாள்களாகக் குடியேற்றிவிடும் வழக்கமே இத்தகைய ஒப்பந்தக் கூலி முறையாகும். கடன் தொகையைப் பெற்றவர்கள் அதைத் திருப்பித் தரப் போவதில்லை. தெரிந்தே, விலைக்கு விற்பதாகக் கூறாமல் கடன் தொகையைப் பெறுவதாகக் கூறி இவர்களை விற்று விடுகின்றனர். இத்தகைய முறை, கி.பி. 1872 இலும் நிலவியதென்று ஏடு–66, ஏடு–71 ஆகியவற்றால் தெரிய வருகிறது.

தொடராச் சீட்டு

ஒப்பந்தக் கூலி முறை என்பது 'ஆள் ஒற்றிக் கடன் சீட்டு' என்ற பெயரில் குறிப்பிடப்படுகிறது எனில், உறவினை முறித்துக் கொள்தல் 'தொடராச் சீட்டு' என்ற பெயரில் குறிப்பிடப்படுகிறது. ஏடு–110 இல் முட்டை முழுங்கி என்பவளின் பேர்த்தி ஈசுவர அம்மணி என்பவர், தாம் ஒருவரிடம் வைப்பாட்டியாக இருந்த உறவினை, குறிப்பிட்ட தொகை பெற்றுக் கொண்டு முறித்துக் கொள்வது 'தொடராச் சீட்டு' என்ற பெயரில் குறிப்பிடப்படுகிறது. இச் சுவடி கி.பி. 1836 ஆம் ஆண்டைச் சேர்ந்ததாகும். கி.பி. 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி தொடங்கி 19 ஆம் நூற்றாண்டு முடிய தொடர்ந்து நிலவிய சமூக நடைமுறைகளையும், வழக்கங்களையும் அறிவதற்குத் தரங்கம்பாடி ஓலை ஆவணங்கள் பெரிதும் துணைபுரிகின்றன.

அடிக்குறிப்புகள்

1 S.I.I. Vol.IV No.399

2 Ibid No.401

3 நற்றிணை 131, அகநானூறு 100, புறநானூறு 391–இன் அடிக்குறிப்பு

4 சரஸ்வதி மகால் நூலகப் பதிப்பு, தஞ்சாவூர்

5 ப.2401, Tamil Lexicon, Madras University 1982

6 சடங்கன் பாடி என்ற ஊர்ப் பெயரே "சர்ஹங்" என்ற மாலுமி அல்லது மீகாமன் பதவிப் பெயருடன் தொடர்புடையதாகலாம். கி.பி.14 ஆம் நூற்றாண்டில் முதல் மாறவர்மன் குலசேகர பாண்டியன் சார்பாக சுல்தான் ஜமால்தீன் என்ற எகிப்திய (கெய்ரோ) வணிகர் மங்கோலிய அரசன் குப்ளே கானுடன் தொடர்பு கொண்டிருந்தார் என்பது வரலாறு. எனவே அரபு மொழி வழக்கு தமிழில் புகுந்தமைக்கு இது சான்றாக இருக்க வாய்ப்புண்டு. இருப்பினும் இது தனித்த ஆய்வுக்குரியது.

7 பக்கம் 1464, Tamil Lexicon – Madras University .

8 பக்கம் 392, மேற்படி நூல்.

9 தமப்பனார் என்ற பூர்வ வடிவம் தவப்பனார் என்று திரிந்து வழங்கத் தொடங்கி,காலப் போக்கில் தகப்பனார் எனத் 'திருத்த' ப்பட்டது. (இவ்வாறு திருத்தப்படும் முன்னர் தவப்பனார் என்பதே தோப்பனார் என மேலும் திரிந்துள்ளது) தவப்பன் என்ற வழக்கு, கி.பி 1236 ஆம் ஆண்டிற்குரிய அச்சுதமங்கலம் கல்வெட்டில் இடம் பெற்றுள்ளது. (தொடர் எண் 267/1978 'நன்னிலம் கல்வெட்டுகள் தொகுதி 2 : தொகுப்பாசிரியை ஆ.பத்மாவதி, தொல்பொருள் ஆய்வுத்துறை 1980).

இந்நூலில் ஆண்டுகளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ள தமிழ் எண்கள்

௧	=	1
௨	=	2
௩	=	3
௪	=	4
௫	=	5
௬	=	6
௭	=	7
௮	=	8
௯	=	9
௰	=	10
௱	=	100
௲	=	1000

1977 என்பது 1000 + (9X 100) + (7X10) + 7 என்ற முறையிலே ௲௯௱௭௰௭ என்று எழுதப்படுவது வழக்கம்.

தரங்கம்பாடி ஓலை ஆவணங்கள்



ஏடு 1

முன் பக்கம்:

1 நூ௲௱௩௰௯க ஷூ தையி மீ ச உ பிறயாத்தில் இருக்கும் ஸ்ரீஸ்ரீ பஞ்சநதி செட்டியா.

2 அவர்களுக்குச் சாத்தங்குடி அய்யாவு செட்டி யெழுதிக் குடுத்த வெண்ணிலை கடன்

3 சீட்டுயென்னமென்டால் தங்களிடத்தில் னான் றொக்கம் பத்திக் கொண்டது

4 சென்னபட்டணம் ரூ உ௰– இந்த ருபாயி யிருவதும் னான் பத்திக் கொண்டபடியால்

5 மீ க க்கு ௱ க்கு க ஆக வட்டி குட்டி[1] மாசி மீ ௰ரு உ குள்லே றொக்கத்தில் சம்மதி பண்ணு

பின் பக்கம்:

6 வேனாகவும் இப்படிக்கு[2] நெட்டெழுத்தும் கையெழுத்து வெ. அய்யாவு. . .

ஏடு 2

முன்பக்கம்:

1 நூ௲௱௩௰௯ச ஷூ தையி மீ உ வ சாத்தங்குடியிலிருக்கும் செட்டியாரவர்கள் சீ சபாபதி செட்டியாரவர்களுக்கு

2 குருவப்பன் யெழுதிக் குடுத்த வெண்ணிலைக் கடன் சீட்டு யென்ன வெண்டால் யென்னுடைய அவசர

3 நிமித்தம் கடனாக வாங்கினது செ ரூ[3] ௩ இந்த ரூபாய் மூனும் னான் ரொக்கம் பத்திக் கொண்ட

4 படியினாலே சித்திரை மீ ௩௰வ குள்ளே ௱ கி க[4] வட்டி கூட்டி யேறின வட்டியுமுதலு சம்மதி பண்ணு

பின் பக்கம்:

5 வேனாகவும் யிப்படி இரெண்டு சாட்சிகள் முன்னிலைக்கு யென் கையொப்பம் வைத்துக் குடுத்தேன்

6 நெட்டெழுத்தும் கையெழுத்தும் குருவப்பன்–

7 முருகன் அறிவேன்

8 ராமசாமி அறிவேன்

---

1 "கூட்டி" எனப் படிக்கவும்

2 "இடிகி" என எழுதப்பட்டுள்ளது

3 "சென்னப் பட்டணம் ரூபாய்" .

4 100 க்கு 1

ஏடு 3

முன்பக்கம்:

1 *து ஆாநு[ய]*உ ஷூ ஆடி மீ சு வ ஸ்ரீஸ்ரீ அப்புச் செட்டியாரவர்களுக்கு பரமானந்த ப்ளை[1] யெழுதிக்*

2 *கொடுத்த வெண்ணிலை கடன் சீட்டுயென்ன மென்றால் னான் முன் அம்மானுக்காக வாங்கி*

3 *ப் பிரகல சம்பா. நெல் கோட்டைக்கு ரூ.உ க்கு நாளது வ யில் பாக்கி முதலீடு ரூ .க ? ೭[2] நாளது மீ ௲யவ*

4 *க்குள் கொடுப்பேனாகவும் இந்தக் கெடு தப்பினால் மீ க்குள் இதற்கு வட்டி கூட்டி உடையவர்*

பின் பக்கம்:

5 *வேண்டும் போது கொடுப்பேனாகவும் இந்தப் படி சம்மதித்து*

6 *ரெண்டு சாட்சிகள் முன்பாக யிதில் யென் கையெழுத்து வைத்துக் கொடுத்தேன்*

7 *இந்த சீட்டு யெழுதின நன்மைக்கு அப்பு செட்டியார் நெட்டெழுத்து* [3]

ஏடு 4

முன்பக்கம்:

1 *து ஆாநுயஎ ஷூ கார்த்திகை மீ உ[ய]*சு வ செம்பிடப் பாளையத்திலிருக்கும் நந்தவானம் தோட்டக் காற னாறாயண செட்டிக்கி சாத்தங்*

2 *குடியிலிருக்கும் ஸ்ரீஸ்ரீ நபாபு சாலை சேவுகன் சபாபதி யெழுதிக் கொடுத்த பாசிக் குத்தகை சீட்டு யென்ன மென்றால் இந்தனால் நந்த*

3 *வானம் தெ. வடக்கு இருக்கு೭ குலம் ரெண்டில் இருக்கப்பட்ட மஷ்சங்களை[4] பிடித்துக் கொள்ளும் படியாக னான் குத்தகை*

4 *கொண்டது கும்பினி ரூச இந்த ரூபாயினாலும் இண்ணு முதல் ஒரு மாசத் தவணையில் குடுத்து விடுகிறது இண்ணு முதல்*

பின் பக்கம்:

5 *குளத்தில் துண்டி போட்டு பிடித்து வருகிறது வலை ஆள் விட்டு பிடிக்கிறது வாடியாத்தில் புது செல்வ வத்து விழுந்த*

6 *உடனே பிடித்துக் கொள்கிறதே அல்லாமல் அதினருகில் வலை போட்டு ஆளிட்டும் பிடிக்கக் கூடாது தண்ணீரும்*

7 *குழப்பக் கூடாது தண்ணி சுண்டி மீன் மிதப்பு கண்டால் பிடித்துக் கொள்ளுகிற[து] இதினடியில் தமிழாள் வந்து பிடிக்க கூடாது இந்த சம்மதித்து சாஷ்சிகள் முன்னுக்கு னாறாயன செட்டிக்கி சபாபதி பாசி குத்த*

8 *கை சீட்டு யெழுதிக் கொடுத்தேன்*

---

1 "பிள்ளை" என்ற ஜாதிப்பட்டத்தின் குறியீடு.

2 "ரூபாய் ஒன்றரையும்"

3 "மன்னியன் அறிவேன். . சுராமன் அறிவேன்" என்று முதல் பக்கத்திலும், "இந்த ரூபாயி ஒண்ணுரை ௵ கையெழுத்து பரமானந்த பிள்ளை"என்று 2 ஆம் பக்கத்திலும் உள்ளன

4 "குளம் இரண்டிலும் இருக்கும் மச்சங்களை" (மச்சம்=மீன்) எனப் படிக்கவும்.

நூல் சேகரம்
எண். ....
சென்னை - 600 008

ஏடு 5

முன்பக்கம்:

1 தூஆாநுயச ஞூல பங்குனி மீ கூ உ தயங்கன் பாடியை சேர்ந்தி [1] சாத்தங். .

2 அவர்களுக்கு ஷெ கோட்டையிலிருக்கும் யிரபடுக்காற [2] வீரப்ப பிள்ளை யெ. . .

3 என்னுவென்றால் இந்தனாள் கடனாக வாங்கினது செ.ரூ உயஇந்த றூ . .

4 யேறின வட்டியு முதலும் இதுநடுத்த சித்திரை மீ நுயஉ க்குள் என
குடுப்பேனா . . . .

பின் பக்கம்:

5 கள் முன்பாக இதில் யென் கையெழுத்து வய்த்து கு . . .

6 இவர்கள் சம்மதியில் பரசுராமன் நெட்டெழுத்து[3]

ஏடு 6

முன்பக்கம்:

1 தூஆாசயச ஞூல டிசம்பர் மீ யக உ யில் தரங்கம்பாடியில் சேர்ந்த
சாத்தங்குடியிலிருக்கும்(௨) ஸ்ரீ ஸ்ரீ. . .

2 வேணிப் பாளைய[4] சேரியிலிருக்கு௨ முத்து யெழுதிக் குடுத்த மாட்டுத்தோல்
ஒப்பந்த சீட்டாவது . . .

3 ஜ_[5]க கி மாட்டுத் தோல் . . .ரூ . . . சிக் கொண்டு னான் முன்னுதாக
பத்திக் கொண்டது ரூ. உய

4 நுயனாளையில் முடி. . .கொண்டு வந்து வழக்கப்படி ஒப்பந்தம் போட்டு
ஆதி . . .

பின் பக்கம்:

5 னாகவும் . . . தாமினாகவு௨ தோல் யிளப்ப மாயிருந்தால் . . ா க்கி நு

6 முதலு௨ ஒடையவர் வேண்டும் போது ஒடனே சம்மதி பண்ணுவேனாகவும்
யிந்தப்படி

7 யென் மனோறாஸி யிதில் யென் கயி ஒப்பம் வெயித்துக் குடுத்தேன்
நெட்டெழுத்து உள்[6]

---

1 "*சேர்ந்த*" எனப் படிக்கவும்

2 "*இரட்டுக்கார*" என்றிருக்கக்கூடும் (முரசு அடிக்கும் தொழில் புரிபவரைக் குறிக்கக் கூடும்)

3 பக்கம் ௨–இல் " கிராஜி " என உள்ளது

4 "வெளிப் பாளைய" எனப் படிக்கவும் – இவ் ஏட்டில் குறிலுக்குரிய இடங்களிலும் கொம்புகள் நெடிலுக்குரியனவாகவே எழுதப்பட்டுள்ளன

5 எடையளவு

6 பக்கம் 1–இல் இடப்புறம் "முத்து கைஎழுத்து" என உள்ளது

ஏடு 7

முன்பக்கம்:

1 தூஆாடயசு ஞூ தையி மீ க–உ பிறையாத்தி (யி)லிருக்கும்
சவுறிராச பிள்ளைக்கி ஷெ யூர் வெளி

2 பாளையத்தில் இருக்கும் பாக்கற் நாக லிங்கம் யெழுதிக் கொடுத்த
வெண்ணிலைக் கடன் சீட்டு

3 யென்னவென்றால் யென் அவசற நிமித்தமாக தம்மிடத்தில் வாங்கினது பாடி[1]
ஆாயசஏ யிந்த

4 பணம் [எண்ணுற்றுப்] ப(ா)தினாலே முக்காளுக்கும் மீ க–க்கு க ஆக வட்டி
கூட்டி கூடிய முத

5 லு யிதின் நாடி மாசி யரு உ க்குள்ளே றொக்கத்தில் சம்மதி பண்ணு
வேனாகவும்

பின் பக்கம்:

6 யிந்த கெடுவில் செளித்த வீட்டறான் [2] ஷெ சொல்லப்பட்ட வட்டிக்கு ஒட்டிக்கி
ரெண்டி

7 ப் பாகா ஞாயவளுக் கொண்டு வாங்கிக்க சம்மதிச்சு ரெண்டு சாஷ் [சி]*கள்
முன்பாக யிந்தச் சீட்டில் யெ. . .

8 கையொப்பம் வைத்துக் கொடுத்தேன் இந்தச் சீட்டில் யெழித்தினத்து சாமி
நெட்டெயெழிது

9 அறிவேன் திருபிலி

ஏடு 8

முன்பக்கம்:

1 தூஆாடயச ஞூ ஆகஸ்ட் மீஎ உ ஸ்ரீ அப்பாரட்டக் காயவர்கள்

2 சாற்பில் ந? – ரூபா .. யெடுத்துக் கொண்ட படியினாலே

3 ந சம்பளத்தில்[3] இந்த மூணரை ரூபாயும் கொண்டு வந்து குடுப்பேனாகவும்

4 அப்பாசாமி [4]

பின் பக்கம்:

5 இதுள்ள ரூபாயி – சபாபதி செட்டியாரிடத்தில் பத்திக் கொண்ட

6 படியினாலே ஷெ யாருக்கு செலுத்தி வக்க வேண்டியது

7 அப்பாருவரையன்

---

1 ''தரங்கம்பாடி ரூபாய்'' எனப் பொருள்படும்

2 "செலுத்தாவிட்டால்" எனப் படிக்கவும்

3. "நம் சம்பளத்தில்" என்று பொருள் படக் கூடும்.

4 பக்கம் 1–இல் இடப்புறம் – "யி – ந்த கீறல் நாகலிங்கம் கையியெழுத்து" என்று எழுத்தாணியாலும் 'பார்க்கற்' என்று மையாலும் எழுதப்பட்டுள்ளன. இந்த ஏட்டில் பிழைகள் மிகவும் அதிகம்.

ஏடு 9

முன்பக்கம்:

